தினத்தளம்
PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
www.dhinathdhalam.com
ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,
மலர் Volume : 01 | இதழ் Issue : 181 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 27.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு முதலமைச்சர் விஜய் செப்டம்பர் 28ந் தேதி செல்கிறார்



நாளை (திங்கள் கிழமை) மதுரைக்கு வருகை தரும் தமிழக முதல் -அமைச்சர் விஜய், மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் செல்ல திட்டமிட்டுள்ளதால், பாதுகாப்பு ஏற்பாடுகளை போலீசார் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் 17 ஆண்டுகளுக்குப் பின்பு கடந்த 17-ம் தேதி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர். இதனை த்தொடர்ந்து செப்.18 முதல் அக்.2-ம் தேதி வரை மண்டல பூஜைகள் நடந்து வருகின்றன. இந்நிலையில், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கான தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் தொடக்க விழா செப். 28-ம் தேதி உசிலம்பட்டியில் நடைபெறுவதாக இருந்தது. திடீரென இடம்மாற்றப்பட்டு, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அதே தேதியில் நடைபெறுகிறது.

மீனாட்சி அம்மன் கோவில்இதன் காரணமாக, மதுரைக்கு வருகை தரும் தமிழக முதல் -அமைச்சர் விஜய், மீனாட்சி அம்மன்கோவிலிலும்தரிசனம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக அரசு வட்டாரத்தில் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, முதல் -அமைச்சரைவரவேற்கும் வகையில், கோவில் நிர்வாகம், காவல்துறை சார்பில் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

முதல் - அமைச்சரான பிறகு விஜய் முதன்முறையாகமதுரைக்கு வருவதால், விமான நிலையத்தில் இருந்து அரசு ராஜாஜி மருத்துவமனை வரை முதல் -அமைச்சர் வரும் வழித்தடம் உள்ளிட்ட நகருக்குள் அளிக்கும் பாதுகாப்பு குறித்து, காவல்துறை அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர். மேலும் அவர், மீனாட்சி அம்மன் கோவிலிலும் தரிசனம் செய்வதால், பாதுகாப்பு ஏற்பாடுகளை தயார் நிலையில் வைக்க உள்ளூர், வெளியூர்களில் இருந்து போலீசாரை வரவழைக்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனிடையே முதல்- அமைச்சரை வரவேற்கும்வகையில ராஜாஜி மருத்துவமனை வளாகத்தில் உள்ள கட்டடங்கள் முழுமையாகச் சீரமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டுவருகின்றன. மேலும், போக்குவரத்திற்கு இடையூறாக இருந்த குண்டும் குழியுமான சாலைகள் சீரமைக்கப்பட்டு, புதிய தார்ச் சாலைகள் அமைக்கும் பணியும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. முதல் -அமைச்சரின் வருகையையொட்டி பெருந்திரளான பொதுமக்களும், தமிழக வெற்றிக் கழகத் தொண்டர்களும் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால்,பலத்தபாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மதுரை செல்லும் முதல் -அமைச்சர் விஜய், பகல் 12.30 மணிக்கு ராஜாஜி மருத்துவமனையில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை தொடங்கி வைக்கிறார். பின்னர்பகல்1மணிக்கு புனரமைக்கப்பட்ட காந்தி அருங்காட்சியகத்தை திறந்து வைக்கிறார்.முதல் -அமைச்சர் விஜய் மாலை 4.30 மணிக்கு மீனாட்சி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்ய உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஆசிய விளையாட்டுப் போட்டி: ஈரானை வீழ்த்தி தங்கம் வென்றது இந்திய கபடி அணி



டோகாய் (ஜப்பான்): ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஈரானை வீழ்த்தி இந்திய மகளிர் கபடி அணி தங்கப்பதக்கம் வென்றது. இதன்மூலம், இந்தியா வென்றுள்ள தங்கப்பதக்கங்களின் எண்ணிக்கை 3 ஆக உயர்ந்துள்ளது.

ஜப்பானின் டோகாய் நகரில் உள்ள சிட்டிசன் ஜிம்னாசியத்தில் நடைபெற்ற கபடி இறுதிப் போட்டியில் ஈரான் அணியும் இந்திய அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில், இந்திய அணி 37-34 என்ற புள்ளிக் கணக்கில் ஈரானை வீழ்த்தியது.

இதன்மூலம், நடப்பு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா வென்றுள்ள தங்கப்பதக்கங்களின் எண்ணிக்கை 3 ஆக உயர்ந்துள்ளது.

இதற்கு முன், மகளிர் கிரிக்கெட் அணியும், 10 மீட்டர்ஏர்பிஸ்டல்கலப்பு அணி பிரிவில், சுருச்சி சிங் போகத் மற்றும் கமல்ஜீத் ஜோடியும் தங்கப் பதக்கம் வென்றன.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 2010முதல் மகளிர் கபடிப் போட்டி இடம்பெற்று வருகிறது. 2018-ம் ஆண்டு போட்டிகளில் ஈரானுக்கு அடுத்படியாகஇந்தியாஇரண்டாம் இடம் பிடித்தது. அதன் பிறகு அனைத்து ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் இந்திய மகளிர் அணி தங்கப்பதக்கத்தையே வென்றுள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கபடிப் பிரிவில் இந்தியா வெல்லும் 12வது தங்கப்பதக்கம் இதுவாகும். இதில்,1990 முதல் ஆண்கள் அணி 8 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

நடைபெற உள்ள ஆண்கள் கபடி இறுதிப்போட்டியில் இந்திய அணி, ஈரானை எதிர்கொள்கிறது.

பதக்கப்பட்டியலில் 102 தங்கம், 38 வெள்ளி, 25 வெண்கலம் என 165 பதக்கங்களுடன் சீனா முதலிடத்தில் உள்ளது. 29 தங்கம், 43 வெள்ளி, 45 வெண்கலம் என 117 பதக்கங்களுடன் ஜப்பான் இரண்டாம் இடம் பிடித்துள்ளது. 13 தங்கம், 18 வெள்ளி, 35 வெண்கலம் என 66 பதக்கங்களுடன் தென் கொரியா மூன்றாவது இடம் பிடித்துள்ளது.

3 தங்கம்,11 வெள்ளி,13 வெண்கலம் என மொத்தம் 27 பதக்கங்களுடன் இந்தியா 12வது இடம் பிடித்துள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டியில், ஸ்குவாஷ் கலப்பு இரட்டையர் (Mixed Doubles) பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டை சேர்ந்த ஸ்குவாஷ் வீரர்கள் ஜோஷ்னா சின்னப்பா மற்றும் வேலவன் செந்தில்குமார் ஆகியோருக்கு முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "ஜப்பானில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டுப் போட்டியில், ஸ்குவாஷ் (Squash) விளையாட்டின் கலப்பு இரட்டையர் (Mixed Doubles) பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்று இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ள ஸ்குவாஷ் வீரர்கள் ஜோஷ்னா சின்னப்பா மற்றும் வேலவன் செந்தில்குமார் ஆகியோருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகள்.

இவ்வீரர்களின் மகத்தான சாதனையைப் பாராட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் உயரிய ஊக்கத்தொகையாக தலா ரூ.30 இலட்சம் வழங்கப்படும். இவர்களது வெற்றி, தமிழ்நாட்டின் இளம் தலைமுறை விளையாட்டு வீரர்களுக்குப் புதிய உத்வேகத்தையும், நம்பிக்கையையும் அளிக்கும்.

இவர்களைப் போன்ற திறமைமிக்க அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் தமிழ்நாடு அரசு என்றும் உறுதுணையாக நிற்கும். இவர்கள் மேலும் பல சாதனைகளைப் படைக்க வாழ்த்துகள்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# திருட்டுத் தங்கம் வாங்கிய விவகாரம்: தனியார் நிறுவனத்தின் 16 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை



சென்னை: திருட்டுத் தங்கத்தை வாங்கி சட்டவிரோத பணிப்பரிமாற்றத்தில் ஈடுபட்டதாக தனியார் நிறுவனத்துக்குச்சொந்தமான 16 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. 2 நாட்கள் நடத்திய சோதனையில் ரொக்கம், தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களிடம் உள்ள பழைய தங்க நகைகள் மற்றும் அடகு வைக்கப்பட்ட தங்கத்தை வாங்கி, அதற்கு அன்றைய சந்தை விலைக்குஏற்பஉடனடிப் பணம் வழங்கும் பிரபல வணிக நிறுவனமான தனியார்நிறுவனம்பெங்களூரை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது.

இந் நிறுவனம், அதன் பங்குதாரர்கள் மற்றும் இயக்குநர்கள், திருட்டுத் தங்க நகைகள் மற்றும் பொருட்களைவாங்குதல் மற்றும் பதுக்குதல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக பல்வேறு காவல் நிலையங்களில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, குற்றப்பத்திரிகைளும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அந்தவகையில், காவல்துறையின் எஃப்.ஐ.ஆர் -களை அடிப்படையாகக் கொண்டு சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தடுப்பு சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறையும் தனியாக விசாரணையை தொடங்கியது.

விசாரணையில், இந் நிறுவனம், திருட்டு நகைகளைவாங்கி,அதன் மூலம் பெருமளவில் சட்டவிரோதப் பணத்தைப் பரிமாற்றம் செய்தது முதற்கட்ட விசாரணையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், கடந்த 23, 24 ஆகிய தேதிகளில் பெங்களூரு, சென்னை, ஐதராபாத், விசாகப்பட்டினம் உள்பட 16 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது.

இந்தசோதனைதொடர்பாக அமலாக்கத்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: திருட்டு தங்க நகைகளைத் தொடர்ச்சியாக வாங்கிச் சட்டவிரோதமாகப் பணம் சேர்த்ததாக எழுந்த புகாரின் பேரில், தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறை தீவிர சோதனை நடத்தியுள்ளது.

பெங்களூரு, சென்னை, ஐதராபாத் மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய நகரங்களில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்தின் தலைமை அலுவலகம், கிளைகள், அதன் இயக்குநர்கள், முன்னாள் இயக்குநர்கள் மற்றும் பங்குதாரர்களின் வீடுகள் உட்பட மொத்தம் 16 இடங்களில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது. இந்நிறுவனத்துடன் தொடர்புடைய முக்கிய நபர்களானபி.எஸ்.அயூப் (ஏ) பொம்மனஹள்ளி பாபு,ஒபேதுல்லாஏ,முகமது சல்மான் ஏ மற்றும் அர்பின் தாஜ் ஏ ஆகியோர் இந்த சட்டவிரோத குற்ற நடவடிக்கைகள் மூலம் பெருமளவிலான சொத்துக்களை சேர்த்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. சோதனை நடைபெற்ற போது, இவர்கள் ஒத்துழைப்பு வழங்காமல் தலைமறைவாகி விட்டனர். மேலும், சோதனைக்கு உட்படுத்தப் பட்ட வணிக நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களும் சோதனை சமயத்தில் அங்கு இருக்கக்கூடாது என இவர்களால் முன்கூட்டியே அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இரு நாட்கள் நடைபெற்ற தீவிர சோதனையின் முடிவில், குற்றச் செயல்கள் மூலம் ஈட்டப்பட்ட ரூ. 7,52,000 ரொக்கப் பணம், கணக்கில் வராத பெருமளவிலான வெளிநாட்டு நாணயங்கள், தங்க நகைகள் மற்றும் வெள்ளி ஆபரணங்கள் ஆகியவைகைப்பற்றப்பட்டுள்ளன . இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலருக்கு உடல்நல குறைவு தெற்கு மாவட்டச் செயலாளர் சிவபத்மநாதன் நலன் விசாரிப்பு



தென்காசி சட்டமன்றத் தொகுதி ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் வாடியூர் ஊரைச் சேர்ந்த கழக மாநில பேச்சாளர் வாடியூர் மரியராஜ் அவர்கள் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டு அவரது இடது கால் அகற்றப்பட்டுள்ளது மருத்துவ சிகிச்சை முடிந்து மருத்துவ ஓய்வில் அவரது இல்லத்தில் இருந்து வருகிறார்

வாடியூர் மரியராஜ் அவர்கள் தற்போது கழகத் தலைவர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் ஒருவரை நியமன ஒன்றிய கவுன்சிலராக நியமிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருந்தார்கள். அதன் அடிப்படையில் வாடியூர் மரியராஜ் அவர்கள் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் நியமன ஒன்றிய கவுன்சிலர் ஆகவும் பணிபுரிந்து வருகிறார்.

சிறந்த கொள்கைவாதி மாநில பேச்சாளராக தமிழக முழுவதும் கழக கொள்கைகளை எடுத்துச் சொல்லி பேசி வந்தவர் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பாக உடலில் சர்க்கரை நோய் அதிகமாக தெரிந்ததின் அடிப்படையில் தென்காசி அரசு மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சைக்காக சேர்ந்தார்

மருத்துவ சிகிச்சை முடிந்து அவரது இடது கால் அகற்றப்பட்டு தற்போது அவரது இல்லத்தில் ஓய்வில் இருந்து வருகிறார் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது மரியராஜ் அவர்கள் தமிழக முழுவதும் கழகப் பேச்சாளராக கழகக் கொள்கைகளைபேசிவருகிறார் அவருடையபுதல்வருக்கு தலைவர் அவர்களின் நல்லாட்சியின் போது சுகாதாரத்துறை தென்காசி அரசு மருத்துவமனையில் நிரந்தரபணியிடம்நேர்காணல்அழைப்பு வந்தது அதன் அடிப்படையில் அவருக்கு அந்த பணியிடத்தை அப்போது நான் மாவட்ட கழகச் செயலாளராக இருந்தபோது பெற்றுக் கொடுத்தேன் அவரும் தென்காசி அரசு மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறார் அவரை பார்க்க நேரில் சென்றேன் தனது கால் அகற்றப்பட்டு பாதிப்புக்கு உள்ளாகி இருந்ததை கூட மறந்து ஒரு நிமிடம் கூட வேறு எந்த சிந்தனையும் இல்லாமல் கட்சி சிந்தனையிலே இருக்கக்கூடியவர் இன்று நான் சென்று பார்க்க சென்றபோதும்இருக்கிறார்

இரண்டு தொகுதிகளையும் திமுக வெற்றி பெற்று விடும் இன்று கழக இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தாராபுரம் இடைத்தேர்தல் பிரச்சாரத்திற்கு வருகிறார் என்னுடைய கால் சரியாக இருந்தால் நானும் தேர்தல் பிரச்சாரத்திற்கு சென்று இருப்பேன் என்று வருத்தப்பட்டு பேசியது எங்களுக்கும் மன வருத்தத்தை தந்தது அந்த அளவிற்கு இயக்கப்பட்டு கொண்டவர்

இன்று நானும் வாடியூர் ஒன்றிய கவுன்சிலர் அந்தோணிச்சாமி மாவட்ட பிரதிநிதி அன்பழகன்மாவட்டபிரதிநிதி ஸ்டீபன் சத்யராஜ் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் அசோக் கிளைக் கழக செயலாளர் பிலிப்ஸ்,சிவசக்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சென்று அவருடைய உடல்நலத்தைவிசாரித்து பழங்கள் கொடுத்தும் மருத்துவ உதவி தொகை கொடுத்தும் அவரது உடல்நலத்தையும்விசாரித்தோம்

விரைவில் நல்ல குணமடைந்து கழகப் பணி செய்திட அனைவரும் வேண்டுவோம்



## தாராபுரம் இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் சுகன்யாவுக்கு தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயபாலன் ஆதரவு திரட்டினார்

தாராபுரம் (தனி) சட்டமன்றத்தொகுதி இடைத்தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சுகன்யாவுக்கு ஆதரவாக கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் தீவிரமாக தேர்தல் பணியாற்ற வேண்டும் என்று தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் திமுக சார்பில் சுகன்யா வேட்பாளராக போட்டியிடுகிறார். அவரை ஆதரித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் உதயநிதி தென்மண்டல பொறுப்பாளரும் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி அவர்களின் வழிகாட்டுதல்படி கழகத் துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் வெள்ளக்கோயில் மு.பி. சாமிநாதன் திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் இள பத்மநாபன் தேர்தல் பணிமனை பொறுப்பாளர் ராசி கே ஆர் முத்து குமார் தலைமை செயற்குழு உறுப்பினர் கே எஸ் தனசேகர் மூலனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் துறை தமிழரசு பேரூர் கழக செயலாளர் தண்டபாணி வெள்ளக்கோயில் நகர செயலாளர் முருகானந்தம் மற்றும் கழகத்தின் அனைத்து நிலை நிர்வாகிகளும், அணிகளின் பொறுப்பாளர்களும்,

தொண்டர்களும் ஒருங்கிணைந்து தேர்தல் பணியாற்றி வருகின்றோம்

வாக்காளர்களை நேரில் சந்தித்து, தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் திமுக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு ஒவ்வொரு வாக்காளரையும் சந்தித்து அவர்களின் கருத்துகளையும் தேவைகளையும் கேட்டறிந்து, ஜனநாயக முறையில் தேர்தல் பணியை மேற்கொண்டு வருகிரோம்.

கழகத் தோழர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட்டு, வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யாவுக்கு ஆதரவு பெருக்கிட வேண்டும். தேர்தல் பணியில் கட்சி நிர்வாகிகள், இளைஞரணி, மகளிரணி உள்ளிட்ட அனைத்து அணியினரும் முழு ஈடுபாட்டுடன் பங்கேற்க வேண்டும்.

தாராபுரம் தொகுதி வாக்காளர்கள் அனைவரும் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றி, திமுகவேட்பாளர்சுகன்யாவுக்கு ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

## செங்கோட்டை கிருஷ்ணன் கோவில் மற்றும் கிராமக் கோவில்களை சீரமைக்க எம்.எல்.ஏ. முயற்சி



தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டம் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரம் இயற்கை எழில்கொஞ்சும் பகுதியானபுளியரை கிராமத்தில் இந்து சமய அறநிலையத் துறைக்கு பாத்தியப்பட்ட கிருஷ்ணன் கோவில் மற்றும் அக்ரஹார விநாயகர் கோவில் அமைந்துள்ளது

இத் திருக்கோவில் திருப்பணிகளைமுடிக்க கடந்த தி.மு.க. ஆட்சியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

அப்பணிகளை விரைந்து முடிக்குமாறு கோவில் காப்பாளர்களும் பக்தர்களும் கடையநல்லூர்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தி.மு. இராமசந்திரன் அவர்களிடம் முறையிட்டனர்.

இக்கோவில்கள் தென்காசி அருள்மிகு காசிவிசுவநாதர் திருக்கோவிலின் கட்டுப்பாட்டில் உள்ளது

அதன் நிர்வாகஅலுவலரை தொடர்பு கொண்டுதிருக்கோவில் பணிகளை விரைந்து முடிக்க சட்டமன்ற உறுப்பினர் வலியுறுத்தினார். அதைத் தொடர்ந்து சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டதை நேற்று *25.09 2026* காலை *11* மணி அளவில்சட்டமன்ற உறுப்பினர் தி.மு. இராசேந்திரன் பார்வையிட்டார்.பின்னர் கோவில் அலுவலர்களுக்கும் நன்றி தெரிவித்தார்சுற்றுச் சுவர் திருப்பணியை விரைந்து முடிக்கும் நடவடிக்கையை கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திருதி.மு.இராசேந்திரன் அவர்களின்சீரியமுயற்சியால் மேற்கொள்ளப்பட்டது. அதனை இன்று பார்வையிட்டு தென்காசி இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் அவர்களின் ஒத்துழைப்பிற்கு நன்றி தெரிவித்தார்.சட்டமன்ற உறுப்பினர் திரு.இராசேந்திரன் அவர்களுடன்: எஸ்.புதூர் பேரூராட்சிசேர்மன்ரவிசங்கர், சமூக ஆர்வலர் புளியரை தங்கராஜ், தென்காசி மாவட்ட துணைச் செயலாளர் கென்னடி , மாவட்ட பிரதிநிதி மணிகண்டன் பூலாங்குடியிருப்பு சீதாராமன், எஸ். புதூர் பேரூர் செயலாளர் கோபால்,ஒன்றிய கவுன்சிலர் சுப்புராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.



மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மதுரை மாவட்டத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக ஆய்வு செய்து பார்வையிட்டார். மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. நிஷாந்த் கிருஷ்ணா, மாநகராட்சி ஆணையாளர் திரு.கௌரவ் குமார்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## நியோமேக்ஸ் நிறுவனத்தால் பாதிக்கப்பட்டோர்கள் மானாமதுரை சங்க முதலீட்டாளர்கள் பொதுக்குழு கூட்டம்



நியோமேக்ஸ் நிறுவனத்தால் பாதிக்கப்பட்டோர்கள் மானாமதுரை சங்க முதலீட்டாளர்கள் பொது குழு கூட்டம் மதுரை வசந்த நகர் பகுதியில் உள்ள தனியார் அரங்கில்நடைப்பெற்றது.

இக்கூட்டத்திற்கு மதுரை மாவட்ட பொறுப்பு மேயர் T.நாகராஜன், கம்னியூஸ்ட் (CPM) கட்சியின் மாவட்ட செயலாளர் கணேசன் ஆகியோர் கலந்துக்கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

இந்த பொது குழு கூட்டத்தில் இந்த பொது குழு கூட்டத்தில் கடந்த *40* மாதங்களாக நடைபெறும் நியோமேக்ஸ் வழக்கில் இதுவரை மொத்த முதலீட்டாளர்கள் எண்ணிக்கையையோ, மொத்த முதலீட்டையையோ குற்றவாளி கம்பெனி குற்றம் சாட்டபிட்டவர்களின் விபரங்களையோ முழுமையாக மொத்தமாக கண்டுபிடிக்கஇணையாமல் பொருளாதார குற்ற பிரிவு காலங்களை கடத்தி கொண்டிருப்பது மிகுந்த மன வேதனையும் மன உளைச்சலையும் உண்டாக்குகிறது

உயிர் நீதிமன்ற சமரச தீர்வை எட்ட வேண்டி ஏல ம்நடைமுறையை அமுல்படுத்தியது எதிர்பார்த்த பலனை தரவில்லை என்பது மிகுந்த மனவேதனை அளிக்கிறது

ஒல நடைமுறையை கேலிக் கூத்தாக்கும் வகையில் சொத்தை ஏலத்திற்கு எடுப்பதும் பின்னர் இரத்து செய்ய முயற்சிப்பதையும் வன்மையாக இந்த கூட்டம் கண்டிக்கிறது

மாற்று ஏற்பாடாக வரும் *30*ம் தேதியுடன் நிறைவு பெறவுள்ள ஏல நிகழ்வுகளை நிறுத்திவிட்டு உயர் நீதிமன்ற கண்காணிப்பில் மீதமிருக்கும் கம்பெனி சொத்துகளை கம்பெனியே ஆறுமாத கெடுவுக்குள் விற்று பணமாக்கி உண்மையான முதலீட்டாளர்களுக்கு முழு முதலீட்டையும் தர உத்திரவிட வேண்டும்

உள்பட ஏழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் இக்கூட்டத்தில் சங்க தலைவர் அழகுமலை, செயலாளர் கணேஷ் ஆதித், பொருளாளர்கள் காளீஸ்வரன், ஜெயராஜ் உள்படசங்கநிர்வாகிகள் பலர் கலந்துக் கொண்டனர்

## சவுதி அரேபியாவில் ஈழத் தமிழருக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை ரத்து செய்ய கோரி மனு அனுப்பிய இந்து மக்கள் கட்சி



சவுதி அரேபியாவில் ஈழத் தமிழரான இலங்கையைச் சேர்ந்த சிவராஜாஅனோஜன்அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தூக்கு தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி, இந்து மக்கள் கட்சி சார்பில் வாலாஜா தபால் நிலையத்தில் இருந்து பதிவு தபால் மூலம் கோரிக்கை மனு அனுப்பப்பட்டது.

இந்து மக்கள் கட்சி தலைவர்அர்ஜுன்சம்பத் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், சமூக ஊடகப் பிரிவு மாநிலத் தலைவர் ஜே. கண்ணன் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், வேலூர் கோட்டத் தலைவர் எஸ். கே. மோகன் தலைமையில் *(26.09.2026)* காலை *10.30* மணியளவில் இந்த மனு அனுப்பப்பட்டது.

இலங்கையின் துணை தூதரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ள இந்த மனுவில், மனிதாபிமான அடிப்படையில்சிவராஜா அனோஜனுக்கு விதிக்கப்பட்டுள்ள தூக்கு தண்டனையை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர் பிரிவு மாவட்டத் தலைவர் கோபாலகிருஷ்ணன், ஆன்மீகப் பிரிவு மாவட்டத் தலைவர் ஸ்ரீதர், மாவட்டப் பொருளாளர் சம்பத், வாலாஜா கிழக்கு ஒன்றிய செயலாளர் மணிவண்ணன், ஒன்றிய பொறுப்பாளர் பூபதி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம்

## பெருந்துறை சட்டமன்றத்தொகுதி சார்பாக குன்னத்தூரில் நடைபெற்றது

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் முனைவர் தொல். திருமாவளவன் எம்.பி அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாட்டின் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, ஈரோடு மாவட்டம் பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்பூர் மாவட்டம் குன்னத்தூர் பேருந்து நிலையம் அருகே ஊத்துக்குளி ஒன்றியம் சார்பில் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பெருந்துறை சட்டமன்றத் தொகுதி மாவட்டச் செயலாளர் வி.விஜயபாலன் தலைமைதாங்கினார். மாவட்டத் துணைச் செயலாளர் அண்ணாமலை முன்னிலைவகிக்க, மாவட்டத் துணைச்செயலாளர்கள் ஜெயக்குமார், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வரவேற்புரையாற்றினர். இக்கூட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் வெ.கனியமுதன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, மாநாட்டுத் தீர்மானங்களை விரிவாக எடுத்துரைத்துச் சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து ஈரோடு மண்டலச் செயலாளர் ஏ.ஜாபர் அலி, திருப்பூர் மண்டலத் துணைச் செயலாளர் மிசு. தங்கவேல், திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.ஆர்.மூர்த்தி, பல்லடம் தொகுதி மாவட்டச் செயலாளர் ரங்கசாமி, பல்லடம் சட்டமன்றத் தொகுதி மாவட்டத் துணைச் செயலாளர் தம்பி முருகானந்தம் ஆகியோர் கருத்துரையாற்றினர். மேலும் இந்நிகழ்வில் மாவட்டச் செயற்குழு உறுப்பினர் அமுதா, மாவட்டத் துணைச்செயலாளர்கள் கவிதா, ஜெனிபர் ரோஸ்லின் மேரி, கிறிஸ்தவ சமூக நீதிப் பேரவை மாவட்ட அமைப்பாளர் நாச்சிமுத்து கொமரன், இளஞ்சிறுத்தை எழுச்சிப் பாசறை மாவட்டச் செயலாளர் நந்தினி, மாவட்டத் துணைச் செயலாளர் விவேக் ஜெரோன், பெருந்துறை மேற்கு ஒன்றியச் செயலாளர் ஜெகதீசன், கிழக்கு ஒன்றியச் செயலாளர் ரமேஷ் வீரன், வடக்கு ஒன்றியச் செயலாளர் குமார், சென்னிமலை ஒன்றியச் செயலாளர் நவீன் குமார், ஒன்றியத் துணைச் செயலாளர் ஜெபராஜ், பெருந்துறை நகரச் செயலாளர் முருகசாமி, மகளிர் மாவட்ட செயலாளர் பாலா நகர் ராதா, சென்னிமலை நகரச் செயலாளர் விஜயா, பெருந்துறை பேரூர் செயலாளர்கள் லதாமணி, வினிதா பாஸ்கரன், இளஞ்சிறுத்தைஎழுச்சிப்பாசறை ஒன்றியச் செயலாளர் சரண்குமார், பெருந்துறை ஒன்றியத்துணைச் செயலாளர் சௌந்தர், ஒன்றியப் பொருளாளர் தனலட்சுமி, ஊத்துக்குளி வடக்கு ஒன்றியச் செயலாளர் குமார், தெற்கு ஒன்றியச் செயலாளர் சதீஷ் பாண்டு, மத்திய ஒன்றியச் செயலாளர் அய்யாவு, இளஞ்சிறுத்தை ஒன்றியச் செயலாளர் பெப்சி விஜி, ஒன்றியத் துணைச் செயலாளர் சிறுத்தை சிவா, காஞ்சிக்கோவில் பேரூர் செயலாளர் சேகர் துரைசாமி, இளஞ்சிறுத்தைஎழுச்சிப்பாசறை மாவட்டச் செயலாளர் பரமேஸ்வரன், விவசாயப் பாதுகாப்பு இயக்க மாவட்ட அமைப்பாளர்கள் சந்திரசேகர், கௌதம், பெருந்துறை பேரூர் துணைத்தலைவர் ரவிச்சந்திரன், இளஞ்சிறுத்தை எழுச்சி ஒன்றியச் செயலாளர் ஸ்ரீநாத், ஒன்றியச் செயலாளர் லதா, காஞ்சிக்கோவில் பேரூர் துணைச் செயலாளர் சின்னச்சாமி, மகளிர்மாவட்டப்பொருளாளர் அம்சா, இளஞ்சிறுத்தைஎழுச்சிப்பாசறை மேற்கு ஒன்றியச் செயலாளர் அட்சயா, பெருந்துறை மேற்கு ஒன்றியத் துணைச் செயலாளர் ராஜா, பெருந்துறை ஒன்றியஅமைப்பாளர் சென்னியப்பன், தொண்டர் விடுதலை முன்னணி மாவட்ட அமைப்பாளர் பிரபுகுமார் மற்றும் காட்சன் உள்ளிட்ட திரளான நிர்வாகிகள், கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் மகளிர் மாவட்டச் செயலாளர் ஜூலியட் வின்சிலி விஜயபாலன் நன்றியுரை ஆற்றினார். முன்னதாக, எழுச்சித் தமிழர் தொல். திருமாவளவன் அவர்களின் கொள்கைக் கருத்துகளை விளக்கும் வகையில் சோ. பாரதி செந்தமிழன் வழங்கிய 'வெளிச்சம்' புரட்சிகர கலைக்குழுவின் எழுச்சி இசை நிகழ்ச்சி தொடர்ந்து மூன்று மணி நேரம் நடைபெற்று அனைவரையும் கவர்ந்தது.



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், நேற்று (26.09.2026) மண்டலம்–2, வார்டு எண்–22க்குட்பட்ட பாரதி தியேட்டர், யமுனை வீதி பகுதியில் வீடு வீடாக சென்று குப்பை சேகரிக்கும் பணிகள் மற்றும் கழிவுகளை தரம் பிரித்து வழங்குவது குறித்து நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் சுகாதார ஆய்வாளர் சதீஷ் உட்பட பலர் உள்ளனர்.

# தாம்பரம் விமானப்படை நிலையத்தில் 54 விமானிகள் பயிற்சி நிறைவு

தாம்பரம் விமானப்படை நிலையத்தில் 54 விமானிகள் பைலட் பயிற்றுவிப்பாளர் பயிற்சியை நிறைவு செய்தனர். இது தொடர்பாக இந்திய பத்திரிகை தகவல் அலுவலகம் பாதுகாப்புப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த 54 விமானிகள், தாம்பரம் விமானப்படை நிலையத்திலுள்ள 'விமானப் பயிற்சி பயிற்றுவிப்பாளர் பள்ளியில்' (FIS) நேற்று தங்கள் பயிற்சியைநிறைவுசெய்தனர். இந்நிகழ்ச்சியில் விமானப்படை மேற்குப் பகுதி தலைமை அதிகாரி ஏர் மார்ஷல் ஜார்ஜ் தாமஸ், முக்கிய விருந்தினராக கலந்துகொண்டார். இவ்விமானிகள் விமானிகள் பயிற்றுவிப்பாளர் பயிற்சியின் 161-வது தொகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.



விமானப்பயிற்சி பயிற்றுவிப்பாளர்களாகத் தகுதி பெற்றவர்களில் இந்திய விமானப்படையைச் சேர்ந்த 42 பேரும், இந்தியக் கடற்படையைச் சேர்ந்த 7 பேரும், இந்திய ராணுவத்தைச்சேர்ந்த3பேரும், இந்தியக் கடலோரக் காவல்படையைச் சேர்ந்த 2 பேரும் அடங்குவர். மேலும், நட்பு நாடுகளைச் சேர்ந்த 3 விமானிகளும் தங்கள் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து தேர்ச்சி பெற்றனர்.

இப்பயிற்சி 13 ஏப்ரல் 2026 அன்று தொடங்கியது. 24 வாரங்கள் நடைபெற்ற கடுமையான பயிற்சியின் நிறைவாக இந்தச் சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது; இப்பயிற்சியில் 10 கட்டங்களிலான விமானப் பயிற்சியும், 200 மணி நேரத்திற்கும் மேலான தரைவழிப் பயிற்சியும் அடங்கும். பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு 'விமானப் பயிற்சி பயிற்றுவிப்பாளர்' என்பதற்கான சிறப்புச் சின்னம் வழங்கப்பட்டது. விமானப்பயிற்சி மற்றும் தரைவழிப் பாடங்களில் சிறந்து விளங்கிய விமானிகளுக்கு முக்கிய விருந்தினர் பரிசுகள் மற்றும் கோப்பைகளை வழங்கினார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாற்றுத்திறனாளி மாணவருக்கு கல்லூரி சேர்க்கை ஆணை வழங்கிய ஆட்சித்தலைவர்



இராணிப்பேட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலக கூட்டரங்கில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற "உயர்வுக்குப் படி (2026-27) - உயர்வுக்கு வழிகாட்டி முகாம்" நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ந. பிரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., கலந்து கொண்டார்.

அப்போது, இராணிப்பேட்டை மாவட்டம் சக்கரமல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயின்ற மாற்றுத்திறனாளி மாணவர் திரு. தினேஷ்குமார், குளோபல் பாரா மெடிக்கல் நிறுவனத்தில் ஆய்வக உதவியாளர் (Laboratory Assistant) பாடப்பிரிவில் சேர்க்கைப் பெற்றதையொட்டி, அவருக்கு சேர்க்கை ஆணையை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கி பாராட்டினார்.

மேலும், உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி வாய்ப்புகளை பயன்படுத்தி மாணவர்கள் தங்களது எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் முதன்மைகல்வி அலுவலர் திருமதி எம். மோகனா, மாவட்ட கல்வி அலுவலர் திரு. துரைவேல் மற்றும் கல்வித் துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# உயிருக்கு ஆபத்தாக நிற்கும் மின் கம்பம்: திமிரி அடுத்த நம்பரை கிராமத்தில் பொதுமக்கள் வேதனை

ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி அடுத்த நம்பரை கிராமத்தில் உள்ள மின் கம்பம் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுவதால், அந்த வழியாக செல்லும் பொதுமக்கள் அச்சத்தில் உள்ளனர்.

பல ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வரும் இந்த சிமெண்ட் மின் கம்பத்தின் வெளிப்புற கான்கிரீட் பகுதி உடைந்து, அதன் உள்ளே உள்ள இரும்புக் கம்பிகள் வெளிப்படையாக தெரியும் நிலையில் உள்ளது. காற்று மற்றும் மழைக்காலங்களில் இந்த மின் கம்பம் எப்போது வேண்டுமானாலும் சரிந்து விழக்கூடும் என்ற அச்சம் கிராம மக்களிடையே நிலவி வருகிறது. இந்த சாலையை தினசரி பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் இருசக்கர வாகன ஓட்டிகள் அதிகளவில் பயன்படுத்தி வருவதால், உடைமை சேதம் ஏற்படும் அபாயம் இருப்பதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். மேலும், இந்த பிரச்சினை குறித்து பலமுறை தகவல் தெரிவிக்கப்பட்ட போதிலும், சம்பந்தப்பட்ட விலாப்பாக்கம் மின்வாரிய அலுவலக அதிகாரிகள் இதுவரை உரிய நடவடிக்கைஎடுக்கவில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

எனவே, மின்வாரிய உயரதிகாரிகள் உடனடியாக சம்பவ இடத்தை ஆய்வு செய்து, சேதமடைந்த மின் கம்பத்தை மாற்றி பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று நம்பரை கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# பணம் பறிக்கும் நோக்கத்தில் பல ஆண்களின் வாழ்க்கையை பாலாக்கிய பெங்களூர் பெண் மீது பரபரப்பு புகார்

## தாயே மகள் மீது பகிரங்க குற்றச்சாட்டு முன்வைத்த அதிர்ச்சி சம்பவம்



திருவாரூரை சேர்ந்த மகேஷ் ராஜா, பெங்களூரை பூர்வீகமாகக் கொண்ட முன்னாள் பாஜக நிர்வாகியான திவ்யா சேஷாத்ரி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, தனது வழக்கறிஞர்களுடன் திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனு அளித்துள்ளார்.

2024ஆம் ஆண்டு முதல்திவ்யாசேஷாத்ரியுடன் தனக்கு தொடர்பு இருந்ததாகவும், அந்த காலகட்டத்தில் தன்னிடம் இருந்து சுமார் 80 லட்சம் ரூபாய் பணம் பறித்ததாகவும் மகேஷ் ராஜா குற்றம்சாட்டியுள்ளார். தன்னுடன் இருந்த தனிப்பட்ட வீடியோ க்களை தனது உறவினர்களிடம் திவ்யா சேஷாத்ரி காண்பித்ததாகவும், இதனால் தனது வாழ்க்கையும் நிம்மதியும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல்மற்றும்அதிகார வட்டாரங்களில் உள்ள குடும்பஸ்தர்களை குறிவைத்து பழகி, பின்னர் அவர்களை மிரட்டி பணம் பறிப்பதை திவ்யா சேஷாத்ரி வாடிக்கையாக வைத்திருப்பதாகவும் மகேஷ் ராஜா குற்றம்சாட்டியுள்ளார். இதுகுறித்துதான்வெளியில் தெரிவித்ததால், தனக்கு கொலை மிரட்டல் விடுக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். தான் நடத்தி வரும் சிவகாசி ஸ்பின்னிங் மில் நிறுவனத்தில் நாட்டு வெடிகுண்டு வீசுவோம் என மிரட்டல் விடுக்கப்பட்டதாகவும் மகேஷ் ராஜா குற்றம்சாட்டியுள்ளார். இதனிடையே, திவ்யா சேஷாத்ரியின் தாயார் ரேவதியும் தனது மகள் மீது பரபரப்பு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

தனது உடன்பிறந்த தம்பிக்கே தனது மகள் திவ்யா சேஷாத்ரியை திருமணம் செய்து வைத்ததாகவும், அவர் அரசியலுக்குச் சென்ற பின்னர் பலருடன் தொடர்பு ஏற்பட்டதாகவும் ரேவதி தெரிவித்துள்ளார். தனது பேரக்குழந்தைகளை வைத்து ப்ளாக்மெயில் செய்து தனது தம்பியை மிரட்டி பணம் பெற்றதாகவும், குடும்பத்தினரின் சொத்துகளை

அபகரித்ததாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். பணம் பறிக்கும் நோக்கில் பல ஆண்களை திவ்யா சேஷாத்ரி ஏமாற்றியதாக பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்த ரேவதி, தனது மகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது திருச்சியில் வசிக்கும் திவ்யா சேஷாத்திரி பாஜகவில் ஒபிசி அணி மாநில செயலாளராக இருந்த நிலையில், அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை தொடர்ந்து, கட்சியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டதாக பாஜகவிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார். கணவர், நண்பர் மட்டுமின்றி பெற்ற தாயே திவ்யா சேஷாத்திரியை போலிசார் நவடிக்கைக்கு உள்ளா வேண்டுமென தெரிவித்து பகிர குற்றச்சாட்டுகளை முன்வைத்தது தற்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கின்றன

# ‘வனத்தை விட்டு வெளியேற மாட்டோம்’ போராட்டத்தில் மேகமலை மக்கள் ஆவேசம்



தேனி:

தேனி மாவட்டம் வருசநாடு அருகே தும்மக்குண்டு காந்திகிராமம், சீலமுத்தையாபுரம், வண்டியூர், வீருசின்னம்மாள்புரம், சிங்கராஜபுரம், பசுமலைத்தேரி,கீழபூசனூத்து, மேலபூசனூத்து,அரசரடி, இந்திரா நகர், பொம்மிராஜபுரம் உள்ளிட்ட 98 மலை கிராமங்களில் பட்டா இல்லாத குடும்பங்களை வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இப்பகுதி மக்கள், அரசியல் கட்சிகள், தன்னார்வலர்கள் அமைப்புகளுடன் இணைந்து பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், இன்று (சனிக்கிழமை) கடமலைக்குண்டு பேருந்து நிலையப் பகுதியில் மலைக் கிராம மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தொடர் காத்திருப்பு போராட்டத்தை தொடங்கி உள்ளனர்.

உச்சநீதிமன்றதீர்ப்பை எதிர்கொள்ளும் வகையில்தமிழகஅரசுசீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும்என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைளை இந்த போராட்டத்தில் வலியுறுத்தி வருகின்றனர்.

போராட்டம் நடைபெறும் இடத்தின் தன்மை, கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கைஉள்ளிட்டவை குறித்து எஸ்பி. பிரவீன்கவுதம் நேற்று ஆய்வு செய்தார்.

அசம்பாவிதங்களைத் தவிர்க்க போராட்டம் நடைபெறும் நாட்களில் கடமலைகுண்டு, வருசநாடு மயிலாடும்பாறை தங்கம்மாள்புரம் மூலக்கடை குமணன்தொழு ஆகிய கிராமங்களில் உள்ள 6 டாஸ்மாக்கடைகளையும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

வனகிராம மக்கள் கூறுகையில், "இன்று முதல் பெருந்திரள் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம். இந்நிலையில்,உச்சநீதிமன்றத்தில் மேகமலை வழக்கு வரும் 29-ம் தேதி விசாரணைக்கு வர உள்ளது. அந்த விசாரணையின் தீர்ப்பு எங்களுக்கு சாதகமாக வரவில்லை என்றால் காத்திருப்பு போராட்டத்தை வலுப்படுத்தி நடத்துவோம்" என்றனர்.

# தமிழ்நாடு முழுவதும் 158 சார்பதிவாளர்கள் ஒரே நாளில் இடமாற்றம்




சென்னை: தமிழகம் முழுவதும் ஒரேநாளில் 158 சார்பதிவாளர்களை இடமாற்றம்செய்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் புதிய திட்டங்களில் வீடு, மனைக்கான முதல் பத்திரப்பதிவு, சார்பதிவாளர் அலுவலகத்துக்கு நேரடி வருகையற்ற முறையில்,ஆன்லைன் மூலம் சம்பந்தப்பட்ட விற்பனையாளர் அலுவலகத்தில் இருந்து பதிவுசெய்யும் முறையை கடந்த ஆக. 15-ம் தேதி முதல் வர் விஜய் தொடங்கி வைத்தார்.

அதைத் தொடர்ந்து, இந்த திட்டத்தில் பல்வேறு புதிய நடைமுறைகளும் அவ்வப்போது இணைக்கப்பட்டு, அதற்கான வழிகாட்டுதல்களை பதிவுத்துறை ஐஜி அருண் சுந்தர் தயாளன் வெளியிட்டு வருகிறார்.

அந்த வகையில், நேரடி வருகையில்லா பத்திரப்பதிவில், கட்டணம் செலுத்தி பெறப்படும் வில்லங்க சான்றிதழ் அவசியம் என்று கூறப்பட்டது. இந்த நடைமுறையில் உள்ள பிரச்சினைகள் குறித்து பதிவுத்துறைக்கு பல்வேறு புகார்கள் சென்றன. இதுதொடர்பாக பதிவுத்துறை பல்வேறு ஆய்வுகளைநடத்தி புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. அதன்படி, புதிய திட்டங்களில் வீடு, மனை ஆகியவற்றின் முதல் விற்பனைக்கான பத்திரங்கள், அடமான ஆவணம் போன்றவற்றை பதிவு செய்ய கட்டணமில்லாமல் இணையதளத்தில் பெறப்படும் வில்லங்க சான்றே போதுமானது. ஆவண ஒப்படைப்பு அடமான பத்திரங்களை, 'சிட்டிசன் போர்ட்டல்' வாயிலாக தாக்கல் செய்தாலும் பதிவுக்கு ஏற்கப்படும்.

கடன் நிறைவு தொடர்பான ரசீது ஆவணங்களை பதிவுசெய்ய வில்லங்க சான்று பார்க்க அவசியமில்லை. நேரடி வருகையில்லா பத்திரப்பதிவுக்கு விடுமுறை நாள் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

நேரடி வருகையில்லா பத்திரப்பதிவில் ஆவணதாரர் எங்கிருந்தும் இணையதளம் வாயிலாக பதிவு செய்ய முடியும் என்றுள்ள நிலையில், சிறப்பு பொது அதிகார ஆவணம் பயன்படுத்த இயலாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு சிரமமில்லாத இந்த வருகையில்லா பத்திரப்பதிவு முறையில் கடந்த 40 நாட்களில் 76 ஆயிரம் பத்திரங்கள் பதியப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையே, அக். 15-ம் தேதி முதல் 4 வகையான குடும்ப ஏற்பாடு ஆவணங்கள் காகிதமற்ற பதிவு முறையில் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டு இணையவழியில் ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட உள்ளதாகவும் பதிவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சூழலில்,நேற்று ஒரே நாளில் தமிழகம் முழுவதும் 158 சார்பதிவாளர்களை இடமாற்றம் செய்து பதிவுத்துறை தலைவர் அருண் சுந்தர் தயாளன் உத்தரவிட்டது, பதிவுத்துறை வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 2026 சட்டசபை தேர்தல்: ரூ.19.8 கோடி செலவிட்ட தவெக: திமுகவை விட பலமடங்கு குறைவு

தமிழகம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெற்றன. இதில் போட்டியிட்ட அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படி தங்கள் தேர்தல் வரவு-செலவு கணக்குகளைத்தாக்கல்செய்ய வேண்டும். அதன்படி திமுக, அதிமுக, நாம் தமிழர்ஆகியகட்சிகள் தங்களின் தேர்தல் செலவீன பிரமாணப் பத்திரங்களை தேர்தல் ஆணையத்திடம் அதிகாரப்பூர்வமாக தாக்கல் செய்துள்ளன. அதிகபட்சமாக திமுக ரூ.197 கோடியும், அதிமுக ரூ.112 கோடியும் செலவு செய்து இருப்பது தெரியவந்தது.



தற்போது தவெக தாக்கல் செய்த செலவு கணக்கு விவரங்களும் வெளியாகியுள்ளது. தமிழக வெற்றிக்கழகம் தேர்தலுக்காக ரூ.19.8 கோடி செலவு செய்துள்ளது. திமுக செலவு செய்துள்ள ரூ.197.84 கோடியுடன் ஒப்பிடுகையில் 10ல் ஒரு பங்கு மட்டுமேயாகும். தவெக செலவிட்டமொத்ததொகையில், விளம்பரத்திற்காக ரூ.6.34 கோடி, விஜய்யின் விமான பயண செலவு ரூ.3.54 கோடி, பிரசார பொருட்கள் ரூ.40.54 லட்சம், பொதுக்கூட்டம் மற்றும்ரோடுஷோசெலவு ரூ.2.06 கோடி செலவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரவுகள் ரூ.7.02

தேர்தல் காலத்தில் அனைத்து வழிகளிலும் கிடைத்த வரவுகள் ரூ.7.02 கோடியாகும். தேர்தல் அறிவிக்கப்பட்டபோது கட்சியின் தொடக்க கையிருப்பு ரூ.3.03 கோடியாக இருந்தது; தேர்தல் காலத்தில் கட்சிக்குக் கிடைத்த வரவுகள் ரூ.7.02 கோடியாக இருந்தன. சட்டமன்ற தேர்தலில் தவெக 233 தொகுதிகளில் தனித்து போட்டியிட்டது. இதில், 108 இடங்களில் வெற்றி பெற்றது.விஜய்திருச்சி கிழக்குமற்றும்பெரம்பூர் என இரண்டு தொகுதிகளிலும் போட்டியிட்டு வென்றார்.

# “வெற்று வார்த்தைகள்...” பாகிஸ்தான் பிரதமரின் உரைக்கு ஐ.நா.வில் இந்தியா பதிலடி






நியூயார்க்: பாகிஸ்தானில் இருப்பது ஒரு பொம்மை அரசாங்கம் என விமர்சித்துள்ள இந்தியா, அந்த நாடு தொடர்ந்து பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டால் அதற்கான விளைவுகளை அது சந்திக்க நேரிடும் என எச்சரித்துள்ளது. பாகிஸ்தான் பிரதமரின் உரைக்கு பதிலடி கொடுக்கும் விதமாக இந்தியாவின் உரை அமைந்திருந்தது.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் 81-வது ஐ.நா. பொதுச் சபை கூட்டம் நடைபெற்று வருகிறது. இதில் வெள்ளிக்கிழமை உரையாற்றிய பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், சிந்து நதி நீர் பாகிஸ்தானுக்குள் செல்வதை தடுத்து திசை திருப்பும் இந்தியாவின் செயல் போர் நடவடிக்கையாகக் கருதப்படும் என்றும், காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண, அங்கு சுதந்திரமான, பாரபட்சமற்ற பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி இருந்தார்.

பாகிஸ்தான்பிரதமரின் இந்தியாவுக்கு எதிரான உரைக்கு பதில் அளிக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி, ஐநாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதித்துவத்தின் முதல் செயலாளர் பேட்டல் கெலாட், "ஜனநாயக உரிமைகள் மற்றும் மனித விழுமியங்கள் குறித்த சில பாசுங்குத்தனமான உபதேசங்களை ஓர் ஆட்சியிடமிருந்து இங்கு நாம் கேட்டோம். ஆனால், அந்த ஆட்சியின் தலைநகரோ, இந்த தருணத்தில் அதன் சொந்த மக்களுக்கு எதிராகவே பலப்படுத்தப்பட்டு வருகிறது.

ராணுவத்தின், ராணுவத்தால், ராணுவத்துக்காக நடத்தப்படும் ஓர் ஆட்சியே பாகிஸ்தானில் உள்ளது. அவர்களின் பொம்மைகள் வரலாம்; போகலாம். ஆனால், அதிகாரம் யார் கையில் இருக்கிறது என்பதில் நமக்கு மயக்கம் இருக்கக் கூடாது.

பாகிஸ்தானின் எதார்த்த நிலை அதன் 27-வது அரசியலமைப்புத்திருத்தத்திலும், அதன் உண்மையான ஆட்சியாளருக்கு வழங்கப்பட்டுள்ள வாழ்நாள் சட்டப் பாதுகாப்பிலும் வெளிப்படுகிறது.

நவம்பர் 2025-ல் ஷெபாஸ் ஷெரீப் அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட 27-வது அரசியலம்புத் திருத்தம் என்பது, பாகிஸ்தானின் பாதுகாப்புப் படைகளின் தலைவர் மற்றும் ராணுவத் தளபதி ஃபீல்டு மார்ஷல் ஆசிம் முனிருக்கு சட்ட நடவடிக்கைகளில் இருந்து வாழ்நாள் பாதுகாப்பை வழங்குகிறது.

பாகிஸ்தானின் பிரதிநிதி சித்தரிப்பதைப் போல் அல்லாமல், பாகிஸ்தானும் அதன் கொள்கைகளும் உண்மையில் எத்தகையவை என்பதை இந்த பொதுச் சபை உணர்ந்துகொள்ளும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். ஆண்டுதோறும் பொய்களை திரும்பத் திரும்பச் சொல்வதால் அவை உண்மையாகிவிடாது.

செப். 11, 2001 பயங்கரவாதத் தாக்குதல்களின் 25-ம் ஆண்டு நிறைவை நியூயார்க் நகரமும் உலகமும் அனுசரித்து 2 வாரங்களே ஆகின்றன. இந்தச் சூழலில்தான் ஷெபாஸ் ஷெரீபின் விசித்திரமான கருத்துக்கள் வெளிவந்துள்ளன. இந்தச் சூழலை கருத்தில் கொள்வது முக்கியம். எனெனில், அந்த தாக்குதலின் சூத்திரதாரியான ஒசாமா பின்லேடன், பாகிஸ்தான் ராணுவத்தின் முதன்மை அகாடமிக்கு மிக அருகில்தான் வசித்து வந்தார்.

ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் பிரிக்க முடியாத ஓர் அங்கம். அது எப்போதும் அப்படியே இருக்கும். காஷ்மீரைப் பற்றி நாம் பேச வேண்டுமானால், பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஜம்மு காஷ்மீர் குறித்துப் பேசுவோம். ரவாலகோட் மக்கள் நீண்ட காலமாக எதிர்கொண்டு வரும் கண்மூடித்தனமான கொலைகள், கொடூர வன்முறைகள், அடிப்படை உரிமைகளை மறுக்கும் செயல்கள் குறித்து கேள்வி எழுப்புவோம்.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நீண்டகாலப் பழக்கத்தை பாகிஸ்தான் கொண்டிருக்கிறது. ஏப்ரல் 22, 2025 அன்று நடந்த பஹல்காம் தாக்குதலில் 26 பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாதக் கட்டமைப்புகளை குறிவைத்து மே 7, 2025-ல் இந்தியா ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடங்கியது.

# ஞானேஷ் குமார் விவகாரத்தில் ஒன்றிணையும் எதிர்கட்சிகள்: அடுத்த வாரம் இண்டியா கூட்டணி கூட்டம்

புதுடெல்லி: தலைமைத்தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் விவகாரத்தில் எதிர்கட்சிகள் ஒன்றிணையத் துவங்கி உள்ளன. இது தொடர்பாக அடுத்த வாரம் இண்டியா கூட்டணியின் கூட்டம் நடைபெறவுள்ளது.



தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை விமர்சித்து வந்த எதிர்க்கட்சிகள், இப்போது அவருக்கு எதிராக ஒன்றிணைந்துள்ளன. இதனால், ஞானேஷ் குமார் விவகாரம் தொடர்பான சர்ச்சை மேலும் தீவிரம் அடைகிறது. இந்த விவகாரத்தில் எதிர்கட்சிகள் அனைத்தும் மீண்டும் ஒன்றிணையத் துவங்கி உள்ளன. இது தொடர்பாக அடுத்த வாரம் எதிர்க்கட்சிகளின் முக்கியக் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் மம்தா முதல் இடதுசாரிகள் வரை அனைவரும் ஒன்றிணைந்து கலந்துகொள்ள உள்ளனர். தேர்தல் ஆணைய விவகாரம் குறித்து மம்தா பானர்ஜி மற்றும் அபிஷேக் பானர்ஜி ஆகியோர் ராகுல் காந்தியுடன் பேசியுள்ளனர். மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபியும் மம்தா பானர்ஜியுடன் இதுகுறித்துப் பேசியுள்ளார்.

ஞானேஷ் குமாரை பதவியில் இருந்து நீக்கக் கோரும் எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணியின் மூத்த தலைவர்கள் இது குறித்துத் தொடர்பில் உள்ளனர்.

குறிப்பாக, தமிழகத்தில் விஜய் ஆட்சிக்கான ஆதரவால் இண்டியா கூட்டணியில் இருந்து வெளியேறிய திமுகவும் தொடர்பில் வந்திருக்கிறது. இதையடுத்து, மீண்டும் இண்டியா கூட்டணியில் திமுக சேருமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

ஞானேஷ் குமார் மீது புகார்களை முன்வைக்க, அடுத்த வாரம் கூட்டணிக் கூட்டம் மற்றும் கூட்டுச் செய்தியாளர் சந்திப்புக்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ஞானேஷ் குமாருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் பதவி நீக்கத் தீர்மானம் கொண்டு வரவும் திட்டமிடப்பட்டு வருகிறது.

வரும் செவ்வாய்க்கிழமையன்று காங்கிரஸ் செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில், சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி (எஸ்ஐஆர்) தொடர்பாகத் தேர்தல் ஆணையத்துக்குள் நிலவும் கருத்து வேறுபாடுகள் குறித்தும், ஞானேஷ் குமாருக்கு எதிரான போராட்டங்களை தீவிரப்படுத்துவதற்கான உத்திகள் குறித்தும் முக்கியமாக விவாதிக்கப்படுகின்றன.

# Blast in Pakistan's Dera Ismail Khan kills 11, injures several

*In the aftermath of the blast, one of the visuals from the spot showed a cloud of smoke and bricks and other materials strewn about.*

*At least 11 people were killed in a blast in Dera Ismail Khan city in northwestern Pakistan on Saturday, officials said.*

*30 others sustained injuries in the incident, Reuters news agency cited Pakistan's emergency service Rescue 1122 as saying.*

*Videos of the incident being circulated on social media platforms showed a cloud of grey smoke rising from the alleged site of the explosion. HT could not independently verify the videos.*



*One of the visuals, taken from the site itself, showed the smoke from a closer angle, with bricks and other materials seen strewn about around the spot where the incident allegedly took place.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.